**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**O.S.No: 95/2022** **தேதி: 13.11.2025**

**வா.சா. 1 – திருமால்காந்தி**

**3 வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

வழக்கு விபரங்கள் எனக்கு நன்றாக தெரியும். வழக்கு சொத்துக்கள் ஆதியில் எனது தாத்தாவிற்கு சொந்தமானது. எனது தாத்தாவிற்கு பூர்விக பாத்தியமா, கிரைய பாத்தியமா என்றால் கிரைய பாத்தியம். சொத்துக்கள் இருக்கும் இடம் பரளச்சி கிராமம். எனது தாத்தாவின் பூர்விக ஊர் பரளச்சி கிராமம். தாவா சொத்தின் சர்வே எண்கள் 384/1, 384/2, 384/3A முதல் 384/3L வரை. எனது தாத்தாவிற்கு ஒரே மகன் அழகர்சாமி தேவர் அவர் எனது அப்பா. அவருக்கு பெண் குழந்தைகள் 2 பேர் இருந்தார்கள். அவர்கள் இறந்துவிட்டார்கள். எனது தாத்தாவின் பெயர் சுந்தரத்தேவர். எனது தாத்தாவின் காலத்திற்கு பின்னர் எனது தந்தைக்கும், இரண்டு பெண் பிள்ளைகளுக்கும் சொத்து பாத்தியம் என்றால் அந்த காலத்தில் பெண் பிள்ளைக்கு சொத்து கிடையாது. எனது தந்தை அழகர்சாமிதேவர் இறப்பிற்கு பின்னர் நானும், எனது உடன் பிறந்த கார்மேகத் தேவரும் சொத்தை அடைந்து அனுபவம் செய்து வந்தோம் என்றால் சரிதான். எனது சகோதரர் கார்மேகத் தேவர் 2006 ம் ஆண்டு 384/3F யை 1, 2 பிரதிவாதிக்கு விற்பனை செய்து விட்டார்.

எனது அப்பா 1980 ம் வருடம் இறந்துவிட்டார். எனது தந்தை இறந்த பின்னர் நாங்கள் சொத்தை பிரித்துக்கொண்டோம் என்றால் சரியல்ல. எனது தந்தை உயிருடன் இருந்த பொழுதே சுமார் 45 ஆண்டுகளுக்கு முன்பு வாய்க்கரலாக சொத்தை பிரித்துக்கொண்டோம். சொத்தை பிரித்ததில் இருந்து நானும், எனது அண்ணன் கார்மேகத்தேவரும் சொத்தின் அனுபவத்தில் உள்ளோம். சொத்தை வாய்க்கரலாக பிரித்ததில் இருந்தே அதில் விவசாயம்

செய்து வருகிறோம். எனக்கு தற்போது 76 வயது முடிவடைந்து விட்டது. நான் எஸ்.எஸ்.எல்.சி படித்துள்ளேன். நான் ஊராட்சி ஒன்றியத்தில் BDO ஆக வேலை பார்த்து வந்தேன். நான் அருப்புக்கோட்டை, காரியாபட்டி, சாத்தூர், நரிக்குடி ஆகிய ஊராட்சி ஒன்றியத்தில் BDO ஆக வேலை பார்த்து வந்தேன். நான் அருப்புக்கோட்டையில் குடியிருந்து வந்தேன். அந்த சொத்து எனது அனுபவத்தில் உள்ளதா என்றால் 2019 ம் ஆண்டு வரை நான் சொத்தில் விவசாயம் செய்து வந்தேன். சாட்சி மறுபடியும் சொல்கிறார் UDR சர்வே காலம் சர்வே எண்.384/3H ல் உள்ள 0.35.0 ஏர்ஸ் நிலத்தை 2010 ல் விற்பனை செய்து விட்டேன். அதில் எஞ்சியுள்ள 2.54 ஏக்கர் நிலத்தை 2019 ம் ஆண்டு வரை அனுபவம் செய்து வந்தேன். என் அனுபவத்தில் இருந்த அந்த நிலத்திற்கு வரி ரசீது தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்திற்கு யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் இந்த வழக்கின் 6 ம் பிரதிவாதி பெயரில் பட்டா உள்ளது. பட்டா எண்.9826. வேறு ஒரு நபர் பெயரில் பட்டா உள்ளது சம்பந்தமாக நான் எதுவும் ஆட்சேபனை செய்தேனா என்றால் 2018 ல் ஜீலை மாதம் அருப்புக்கோட்டை கோட்டாட்சியர் அவர்களுக்கு மேல்முறையீடு செய்தேன். அதை அவர் அருப்புக்கோட்டை வட்டாட்சியருக்கு பரிந்துரைக்கு அனுப்பிவிட்டார்.

மேற்படி வட்டாட்சியர் அதை பரிசீலனை செய்து தாவா நிலம் 2.54 ஏக்கர் நிலத்தை UDR ல் போட்டு தவறுதலாக பட்டா வழங்கிவிட்டார்கள் என்றும், மேற்படி நிலம் மனுதாரருக்கு சேர வேண்டியது என்றும் என உத்தரவு வழங்கியுள்ளார். மற்றவர்களுக்கு வழங்கிய பட்டாவை ரத்து செய்யலாம் என்றும், அந்த நிலத்தை மனுதாரர் திருமால்காந்தி மற்றும் அவரது வகையாறாவுக்கு வழங்கலாம் என்று சொல்லியுள்ளார். வா.சா.ஆ 41 ல் கோரிய ஆதாரம் எதுவும் சமர்பிக்கவில்லை என்று மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு சொல்லியுள்ளார். பிராதில் 3 பிரதிவாதிக்கு இந்த வழக்கு 1 ம் பிரதிவாதி கடந்த 02.11.2009 ம் தேதி கிரையம் கொடுத்துள்ளாரா என்றால் மோசடி பத்திரம் மூலம் கிரையம்

கொடுத்துள்ளார். 3ம் பிரதிவாதி கிரைய பெற்ற சொத்தை 4ம் பிரதிவாதிக்கு ஆவண எண்.587/2019 மூலம் கிரையம் கொடுத்துள்ளாரா என்றால் சரிதான். மேற்படி சொத்தை 4ம் பிரதிவாதி, 6ம் பிரதிவாதிக்கு ஆவண எண்.589/2019 மூலம் கிரையம் கொடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி தாவா சொத்தில் 6ம் பிரதிவாதி சோலார் பேனல் அமைத்து மின் உற்பத்தி செய்து வருகிறார் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு தாக்கல் செய்வதற்கு எனது வழக்கறிஞருக்கு நான் தான் விபரம் சொன்னேன். எனது பிராதில் 6ம் பிரதிவாதி சோலார் பேனல் அமைத்து மின் உற்பத்தி செய்து வருவதாக சொல்லிவிட்டு தற்போது அதற்கு விரோதமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி இரண்டு கிரைய ஆவணங்கள் பதிவு துறையால் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்று பரிகாரம் கோரியுள்ளேன். ஆனால் ஆவணத்தை ரத்து செய்வதற்கு எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. ரத்து செய்வதற்கு நீதிமன்ற கட்டணம் அதிகம் செலுத்த வேண்டும் என்பதால் மேற்படி பரிகாரத்தை கோரவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் 6ம் பிரதிவாதி அனுபவத்தில் உள்ளார். நான் 6ம் பிரதிவாதியை தாவா சொத்தில் இருந்து வெளியேற்ற Eviction பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. வழக்கில் கோரிய பரிகாரம் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கை 3ம் பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.